# எடுத்துக்கொள்ளப்படுதலினதும், உபத்திரவங்களினதும் பரிசுத்த நகரத்தினதும், தேவனுடைய சிங்காசனங்களினதும் சாத்தானினதும் தரிசனங்கள -

## இயேசு கிறீஸ்துவை சந்தித்த 8 வயதுள்ள பெண்மனியின் சாட்சி

**(*Jannet Balderas Canela)***



*ஜனட் பால்தராஸ் கனேல்லா ஸ்பானிய பாஷையில் பேசி ஒலிபரப்பாகிய இச்சாட்சி தனிப்பட்ட நம்பிக்கையுள்ள தீர்க்கத்தரிசயினால் ஸ்தீரப்படுத்தப்பட்டுள்ளது. (www.DivineRevelations.info)*

பிரியமான சகோதரர்களே, கர்த்தர் உங்கள் அனைவரையும் இந்த மணித்தியாளத்தில் ஆசீர்வதிப்பாராக. நாங்கள் தேவனுடைய பரிசுத்த வார்த்தையை வேதத்திலிருந்து வாசிப்போம். 2 கொரிந்தியர் 12:1-4, "*மேன்மை பாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன். கிறீஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன் அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான் அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன் தேவன் அறிவார். ; அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிவார்; அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன் தேவன் அறிவார்*".

*(இநத வெளிப்படுத்தலும் பவுல் டர்ஷிஸ் நகரத்திலிருந்த வீட்டின் அத்திவாரங்களை தோண்டி எடுத்தபோது புதைக்கப்பட்டு இருந்த இந்த வெளிப்படுத்தல் வெளியே கொண்டுவரப்பட்டு எங்கள் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)*

நான் செப்டெம்பர் 5ம் திகதி 1999ல் கர்த்தருடன் பெற்றுக் கொண்டதான அனுபவத்தைக் குறித்துப் பேசுகிறேன். நாங்கள் சபையில் ஜெபிக்கும் போது தேவனுடைய வல்லமையானது எங்களுடைய வாழ்க்கைகளை நிரப்பிக்கொண்டிருந்தது. நான் தரையில் விழுந்து என்னுடன் தேவனுடைய பிரசன்னம் இருப்பதை உணர்ந்தேன். கர்த்தர் என்னுடன் தொடர்பு கொண்டு எனக்கு தரிசனங்களைக் காண்பிக்க ஆரம்பிக்கிறார் என அறிந்தேன்.



ஒரு தரிசனத்தில் நான் இரண்டு பாதைகளைக் கண்டேன், ஒன்று மிகவும் விரிவானதும் அநேகர் அதில் நடப்பதையும் கண்டேன், ஆனாலும் அவர்கள் அழிவை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தார்கள். மற்றைய பாதையானது மிகவும் ஒடுங்கியதும், அநேகர் அதில் தேவனை துதித்து கனத்தை, கர்த்தருக்கு செலுத்தி நடந்துக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் கர்த்தர், எனக்கு இன்னுமொரு தரிசனத்தைக் காண்பித்தார் ஒரு தேவதூதன் ஒரு வலுசர்ப்பத்துடன் போராடிக்கொண்டிருந்தார்; அந்த வலுசர்ப்பமானது அக்கினியையும் பேய்களையும் பூமிக்கு அனுப்பிக்கொண்டிருந்தது.



அதன் பிற்பாடு நான் ஒரு பொன்னாலான மினுங்கி பிரகாசித்துக் கொண்டிருந்ததான இன்னுமொரு தரிசனத்தைக் கண்டேன்; அதில் நேரமானது 12 மணி ஆனாலும் நான் ஒரு கை அந்த மணிக்கூட்டிலுள்ள நேரத்தை 11 மணிக்கு செல்லும் படியாக வைத்தார். கர்த்தர் என்னிடம், "*பார் தாசனே நான் நேரத்தை பின்னே போக வைத்தேன் ஏனெனில் **என்** ஜனங்கள் நான் விரும்பும் படி ஆயத்தமில்லை, நான் நேரத்தை பின்னால் எடுக்கிறேன் ஏனெனில் **என்** ஜனங்கள் நான்*

*விரும்பும் படி* ***என்னை*** *துதிப்பதில்லை,* ***என்னுடைய*** *பெரிய கருணையினால் நான் இன்னும் அதிக நேரத்தைக் கூட்டிக்கொடுக்கின்றேன் அப்பொழுது* ***என்*** *பாதத்திற்கு வரும் யாவரும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுவார்கள்.*'' என்றார்.

கர்த்தர் இன்னுமொரு தரிசனத்தைக் காண்பித்தார். நான் தரையில் கிடக்கும் போது, என்னிடம் ஒருவர் ஒரு குதிரையை ஓட்டிக்கொண்டுவந்தார். அவர் தன் கரங்களை நீட்டி நான் தரையில் கிடக்கும் இடத்திற்கு வந்தார். பின்னர் நான் கர்த்தர் என்னை தன் கரங்களில் தூக்கி எடுப்பதை உணர்ந்தேன். அவர் என்னுடைய ஆவியை என் சரீரத்திலிருந்து வெளியே எடுப்பதை உணர்ந்தேன்; பின்னர் நாங்கள் மேலே ஏறி ஓடினோம், உயரமுமற்ற தாழ்வுமற்ற ஒரு இடத்தில் நாங்கள் தங்கினோம். கர்த்தர் என்னிடம், ''*பார் தாசனே* ***நான்*** *உங்களை* ***என்னுடன்*** *கூட்டிவருவதாக கூறினேன், அதையே* ***நான்*** *இப்பொழுது செய்கிறேன், ஏனெனில்* ***நான் என்*** *வார்த்தையினால் கூறுவதை நிறைவேற்றுகிற தேவன்.* ***நான்*** *கூறுவதை செய்வேன். இதனிமித்தமே* ***நான்*** *உங்களை இங்கே கூட்டிவந்தேன். ஆனாலும் முதலில்* ***நான் என்னுடைய*** *காயங்களைக் காட்டுவேன்; அப்பொழுது நீங்கள் கணக்கெடுத்து* ***நான் உங்கள்*** *யாவருக்கும் செய்ததை ஒருபோதும் மறக்க மாட்டீர்கள்.*'' என்றார்.

நாங்கள தேவனின் சிங்காசனத்திற்கு வந்தோம் அங்கே கர்த்தர் எனக்கு ஆணிகளை எய்ந்த இடத்தையும் அவரது பக்கத்தில் ஈட்டியினால் குத்திய இடத்தையும் காண்பித்தார். அவர் எப்படியாக அடிக்கப்பட்டார் எனவும் காண்பித்தார். நான் எங்கள் எல்லோருக்காகவும், அவர் அடிப்பட்டதான எல்லா அடையாளங்களையும் தழும்புகளையும் கண்டேன். அவர், '' *பார்* ***என்*** *தாசனே, அநேகர்* ***நான்*** *உங்கள் யாவருக்காகவும் செய்தவற்றை ஒருவரும் கணக்கில் எடுப்பதில்லை, அநேகர்* ***நான்*** *உங்களுக்காக கல்வாரி சிலுவையில் மரித்ததை மறந்து விட்டார்கள்,* ***நான்*** *அந்த வேதனையை இங்கே உணர்கிறேன், என் தாசனே. என் ஜனங்கள் என்னை மறுதலிக்கும் போது* ***நான்*** *வேதனையை உணர்கிறேன், அது மீண்டும் என் காயங்களை திறப்பது போன்ற வேதனையைக் கொடுக்கிறது, அது* ***என்னை*** *குத்துகிறது. மீண்டும் அவர்கள்* ***என்னை*** *சிலுவையில் அறைவது போன்ற வேதனை.*'' நான் கர்த்தர் அந்த வேதனையை உணர்கிறதன் நிமித்தம அழுவதைக் கண்டேன்.

## -பரலோகம்-



அவர் என்னிடம், ''*தாசனே,* ***நான*** *உங்களுக்கு அநேக காரியங்களைக் காண்பிப்பேன்,* ***நான்*** *பொன்னிலான தெருக்களையும் பளிங்குக் கடலையும் காண்பிப்பேன், அப்பொழுது நீங்கள் சென்று* ***என்*** *ஜனங்களுக்காக* ***நான்*** *வைத்திருக்கிறதான மேன்மையான மகிமைகளைக் குறித்து கூறுவீர்கள்.*'' என்றார்.

நாங்கள் விரைவாக அழகான வீதிகளுள்ள ஒரு இடத்திற்கு வந்தோம், மிகவும் அழகானவை . நான் அப்படிப்பட்ட ஒருகாரியத்தையும் பூமியில் கண்டும் தொட்டும் இல்லை. வீதிகள் மினுங்கின.! கர்த்தர் என்னிடம். '' ***என்*** *தாசனே, இந்த பொன் வீதியை தொட்டுப்பாருங்கள், ஏனெனில் நீங்களும்* ***என்*** *ஜனங்களும் இங்கே வாசம் பண்ணுவார்கள், ஏனெனில்* ***என்*** *ஜனங்கள் இங்கே ஓடுவார்கள் சீக்கிரமாக.*'' என்றார். நான் கர்ததரும் நானும் இருவரும் ஒருமிக்க குதிரையில் ஓடுவதைக்கண்டேன்.

பின்னர் நாங்கள் பளிங்கு கடலிற்கு வந்தோம், அது அழகு நிறைந்தது. நான் கர்த்தருடன் அந்த விலைமதிப்புக்குரிய கடலுக்கூடாக ஓடும் போது, கர்த்தர் என்னிடம், '' ***என்*** *தாசனே, இவை எல்லாம் எனக்கல்ல, இவை* ***என்*** *ஜனங்களுக்காகவே! நீங்கள் தொடக்கூடிய யாவற்றையும்* ***என்*** *ஜனங்களுக்காக* ***நான்*** *மிக்க அதிகமான அன்புடன் ஆயத்தப்படுத்தியவை.*'' பின்னர் அவர், '' *தாசனே, இங்கே வா, ஏனெனில்* ***நான்*** *உங்களுக்கு இன்னும் வேறு அநேக காரியங்களைக் காண்பிப்பேன்.*'' என்றார்.

நாங்கள் ஒரு மிகவும் அழகில் பிரமித்த இடத்திற்கு வந்தோம். நான் இந்த இடத்தில் தேவனுடைய மகிமையையும் அவருடைய வல்லமையையும் உணரக்கூடியதாயிருந்தது. அது ஒரு மிகவும் பெரிய இடம். நான் அங்கே அநேக மேசைகளைக் கண்டேன், இதனால் நான் கர்த்தரிடம், ''*கர்த்தாவே, இந்த மேசைகள் எதற்காக?*'' அவர் என்னிடம், '' *தாசனே, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவீட்டை குறித்தும்* ***நாங்கள்*** *இந்த மேசைகளில் அந்த ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவீட்டை கொண்டாடுவதையும் பற்றி ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.*'' என்றார். நான் எண்ண முடியாத மேசைகளைக் கண்டேன், அவற்றின் முடிவுகளைக் காணமுடியவில்லை. அங்குள்ள ஒவ்வொரு மேசையிலும் தேவதூதர்கள் காணப்பட்டார்கள், இதனிமித்தம் நான் கர்த்தரிடம், '' *ஆண்டவரே, ஏன் ஒவ்வொரு மேசையிலும் ஒவ்வொரு கதிரைக்கு பின்னால் ஒரு தேவதூதன் இருக்கிறார்?*'' எனக் கேட்டேன். கர்த்தர் என்னிடம், '' ***என்*** *தாசனே, இந்த தேவதூதர்கள் இந்த மேசைகளை அலங்கரிக்கிறார்கள், இந்த தேவதூதர்கள் ஒவ்வொரு மேசையையும் ஆயத்தப்படுத்துகிறார்கள் ஏனெனில்* ***நான்*** *எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.*'' என்றார்.

பிரியமான சகோதரனே, சகோதரியே, அந்த மேசைகள் மினுங்கிக் கொண்டு பொன்னால் செய்யப்பட்டு காணப்பட்டது. அந்த மேசைகள் எல்லாம் அழகாக அலங்கரிக்கப்பட்டு காணப்பட்டது. நான் எப்படி ஒவ்வொரு தேவதூதனும், எல்லாம் பொன்னாலான முள்ளுக்கரண்டியையும், கத்தியையும், கரண்டியையும், கண்ணாடி கோப்பைகளையும்,

பாத்திரங்களையும் வைப்பதைக் கண்டேன். கர்த்தர் என்னிடம், " *தாசனே, **என்** ஜனங்களுக்கு ஆயத்தப்படும் படியாக கூறுங்கள் ஏனெனில் **நான்** வெகு சீக்கிரத்தில் அவர்களை **என்னுடன்** கூட்டிச்செல்வேன், அப்பொழுது அவர்கள் **என்னுடன்** இங்கே வந்து ஆட்டுக்குட்டியானவரின் களியாணவீட்டில் களிகூறுவாகள்.*" என்றார்.

அது மிகவும் அழகு மிகுந்தது; மிகுந்த மகிமையும் மாட்சிமையும் நிறைந்த கர்த்தருடைய பிரசன்னம் அங்கே உணரக்கூடியது. கர்த்தர் என்னிடம் கூறி, '*தாசனே இங்கே வா, **நான்** உனக்கு மற்றும் அநேக காரியங்களைக் காண்பிப்பேன்*' என்றார். நாங்கள் அநேக அழகான கதவுகளைக் கொண்ட, மிகவும் அதிகமான அழகான கதவுகளைக் கொண்ட ஒரு இடத்திற்கு வந்தோம். நான் கர்த்தரிடம்,' *கர்த்தாவே, இந்தக் கதவுகளின் பின் என்ன காணப்படுகிறது?* அவர், '*இக்கதவுகளின் பின்னால் **என்** சீஷர்களும், இந்தக் கதவுகளின் பின்னால் **என்** அப்போஸ்தலர்களும், இக் கதவுகளின் பின்னால் ஒரு காலத்தில் பூமியில் **என்** நாமத்தை துதித்து மகிமைப்படுத்திக் கொண்டு நடந்தவர்களும் காணப்படுகிறார்கள்*', என்றார்.

## -மரியாள்-

நான் இவ்வண்ணம் பிரயாணம் பண்ணி, அரைவாசி திறக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கதவடிக்கு வந்தோம், கர்த்தர் என்னிடம், '*தாசனே, இங்கே வா, இந்தக் கதவின் பின்னால் மரியாள் இருக்கிறாள். நீ கிட்டவாக செல்லுவாயானால் அவள் கூறுவதை உனக்குக் கேட்கும், அப்பொழுது நீ மறுபடியும் சென்று என் ஜனங்களுக்கு சொல்லலாம், மரியாள் எவ்வாறு வேதனைப்படுகிறாள், என்பதை நீ ஜனங்களுக்கு சொல்லலாம்*' என்றார். நான் கிட்டச் சென்ற போது ஒரு அழகான பெண்ணைக் கண்டேன், இளமையான இந்தப் பெண் ஒரு அழகான முகமுள்ளவளாக காணப்பட்டாள். அவள் ஒரு மிகவும் சிறிய யன்னலுக்கூடாக முழங்காலில் நின்றபடி பூமியின் மேல் நோக்கி பார்த்தபடி, வர்ணிக்க முடியாத உக்கிரமான வேதனையுடன் அழுதபடி, அவள், "*நீங்கள் ஏன் என்னை நமஸ்கரிக்கிறீர்கள்? ஏன்? என்னிடம் எந்தவிதமான வல்லமையும் இல்லை!ஏன் என்னை நமஸ்கரிக்கிறீகள்? நான் ஒன்றுமே செய்வதில்லை! என்னை நமஸ்கரிக்க வேண்டாம்! எனக்கு முன்பாக குனிந்து வணங்க வேண்டாம்! ஏனெனில் என்னால் உங்களை இரட்சிக்க முடியாது! உங்களை இரட்சிக்க கூடியவர் ஒருவரே, உங்களை மீட்டுக்கொள்ளக் கூடியவரும் அவரே, எல்லா மனித இனத்துக்காகவும் மரித்த, இயேசு! அநேக ஜனங்கள் என்னிடம் வல்லமை உண்டு, என்னால் அற்புதங்களைச் செய்யலாம், ஆனாலும் அது பொய்! நான் ஒன்றுமே செய்வதில்லை! சர்வ வல்ல தேவன்*



*என்னைக்குறித்து திருப்தியடைந்து, இயேசு கிறீஸ்து மனிதனாக பிறந்து எல்லோரையும் இரட்சிக்க கூடிய விதத்தில், என் கருப்பையை பாவித்தார், ஆனாலும் என்னிடம் எந்தவிதமான வல்லமையும் இல்லை. என்னால் ஒன்றுமே செய்யமுடியாது! எனக்கு முன்பாக குனிந்து என்னை நமஸ்கரிக்க வேண்டாம்! ஏனெனில் நான் எந்த விதமான நமஸ்கரிப்பிற்கும் தகுதியற்றவள். தகுதியுள்ளவர் ஒருவரே, நீங்கள் குனிந்து வணங்க வேண்டியவர் ஒருவரே, அவரே இயேசு! அவர் மட்டுமே குணமாக்கிறவரும் இரட்சிக்கிறவரும்.!*"

இவ்விதமாக அந்த பெண்மனி கொடுமையான வேதனையுடன் இருப்பதையும், துயரமும் கண்ணீர் நிறைந்தவளாக இருப்பதையும் என்னால் காணமுடிந்தது. அவள், " *வேண்டாம்! வேண்டாம்! என்னை நமஸ்கரிக்க வேண்டாம்! ஏன் நீங்கள் என் முன்பாக குனிகிறீர்கள்? நான் எதுவும் செய்யதில்லை!*" என கூறி அழுதாள். பிரியமான சகோதரரே, இந்த இளமைப் பெண் இவ்விதமாக மிகுந்த துன்பத்துடனும் வலியுடனும் அழுவதைப் பார்ப்பதற்கு வேதனை கொடுத்தது.

## -வஸ்திரங்களும் கிரீடங்களும்-

கர்தத்ர் என்னிடம், '*தாசனே இங்கே வா, ஏனெனில் **நான்** தொடர்ந்து காரியங்களைக் காண்பிப்பேன்.*" நாங்கள் தேவனின் மகிமையை உணரக்கூடிய ஒரு அழகில் மிக்க ஒரு இடத்திற்கு வந்தோம். நான் வரிசை வரிசையாக மிகவும் அழகுள்ள வெண்மையுள்ள, வெண் வஸ்திரங்களைக் கண்டேன். நான் அவைகளை தொட்ட போது கர்த்தர், " *தாசனே, தொட்டுப்பாருங்கள் இவையாவும் உங்கள் யாவருக்குமே*" என்றார். அங்கே கர்த்தருடைய முகத்திலிருந்து கண்ணீர் வடிந்துக் கொண்டிருந்தது. கர்த்தர் என்னிடம், " *தாசனே, இங்குள்ள அநேக வெண்வஸ்திரங்கள் இங்கேயே ஒரு சரீரம் வரும் வரைக்கும் காத்திருக்கும்.*" நான், "*ஏன் கர்த்தாவே?*" என்றேன் " *ஏனெனில் அநேகர் நான் விரும்பும்படி என்னை நமஸ்கரிப்பதில்லை, அநேகர் நான் உங்கள் யாவருக்கும் செய்யும் எல்லா காரியங்களுக்கும் கவனம் செலுத்துவதில்லை. தாசனே, இங்கேயுள்ள அநேக வஸ்திரங்கள் ஒருவர் வரும்வரை காத்து நிற்கும் ஏனெனில் என் இராஜ்ஜியத்திற்கு நான் அசுத்தமான தொன்றையும்*

*ஏற்றுக்கொள்வதில்லை. என்னுடைய இராஜ்ஜியத்திற்குள் பரிசுத்தமானவற்றை மட்டும உட்பிரவேசிக்க இடமளிப்பேன், ஏனெனில் என் வார்த்தையில் கூறிய பிரகாரம், நான் பரிசுத்தமாக இருப்பது போல நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்.*'' என்றார். (1 பேதுரு 1: 16)

நான் பார்த்த போது அநேக வஸ்திரங்கள்; ஒவ்வொன்றிலும் பொன்னிலான பெயர் எழுதப்பட்டிருந்தது. நான் அங்கே வித்தியாசமான அளவிலுள்ள வஸ்திரங்களைத் தொட்டேன்; நான், ''*கர்த்தாவே, சிறிய வஸ்திரங்களை யார் அணிவார்கள்*?'' கர்த்தர் என்னிடம், ''*தாசனே, ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள் **என்** சிறு பிள்ளைகளே நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், **நான** ஒருவரையும் விசேஷமாக கருதுவதில்லை, இந்த சிறு வஸ்திரங்கள் **என்** நாமத்தை போற்றிதுதிக்கிறவர்களுக்காகவே, அவைகள் என் வீட்டிற்கு செல்ல விரும்பி **என்** நாமத்தை மகிமைப்படுத்தும் **என்** சிறு பிள்ளைகளுக்காகவே, இதனிமித்தம **நான்** அவர்களுக்கு அநேக பெரிய காரீயங்களை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன். **என்னைத்** தேடுகிற எல்லோருக்காகவும் **என்** பாதத்திற்கு வருபவர்களுக்காக **நான்** பெரிய காரியங்களையும் நித்திய ஜீவனையும் ஆயத்தப்படுத்திவைத்திருக்கிறேன்.*'' என்றார் கர்த்தர்.



நாங்கள் தொடர்ந்து சவாரிசெய்து அநேக கிரீடங்களைக் கொண்ட ஒரு இடத்திற்கு வந்தோம். அங்கே பெருவாழ்வுள்ள கிரீடங்களும், மினுங்குகின்ற கிரீடங்களும் காணப்பட்டன. அதனால் நான், ''*ஓ கர்த்தாவே இந்தக் கிரீடங்கள் மிகவும் அழகானவை! இந்தக் கிரீடங்கள் யாருக்கு*?'' எனக் கேட்டேன்.



கர்த்தர் என்னிடம், ''*தாசனே, இந்தக் கிரீடங்கள் **என்** நாமத்தை துதிப்பவர்களுக்காக, **நான்** வேண்டிக்கொள்கிற படி **என்** நாமத்தை உண்மையில் மகிமைப்படுத்தி துதிக்கிறவர்களுக்காக **நான்** வைத்திருக்கிறேன்.*'' என்றார்.

கர்த்தர் எனக்கு வேறு கிரீடங்களையும் காண்பித்தார், ஆனாலும் நான் அவை ஒரு வரம்பை மட்டும் கொண்டிருந்தன. கர்த்தர் என்னிடம், ''*தாசனே இந்தப்பக்கமாக பாருங்கள்.*'' என்றார். நான் இன்னும் அநேக கிரீடங்களைக் கண்டேன், ஆனாலும் இவை முள்ளுகளால் செய்யப்பட்டிருந்தன, இதனால் நான், ''*கர்த்தாவே, எனக்கு முள்ளுகளின் கிரீடத்தையோ வரம்பு மட்டும் கொண்ட கிரீடத்தையோ கொடுக்காதீங்கள்*!.'' என்றேன். கர்த்தர் என்னிடம், '' *தாசனே, இந்த இடத்தில் அநேக வகையான கிரீடங்கள் உள்ளன: செல்வாக்கு மிக்க பெரும்கிரீடங்களும், மினுங்குகின்ற கிரீடங்களும் நீங்கள் கண்டு தொடக்கூடியவை **என்** நாமத்தை உண்மைக்கும் அவர்களின் முழு இருதயத்தோடும் மகிமைப்படுத்தி துதிப்பவர்களுக்கும் என்னுடைய திராட்சைரச தோட்டத்தில் ஊழியம் செய்பவர்களுக்கும் **என்** வீட்டில் இருக்க வாஞ்சையாக இருப்பவர்களுக்கும், என் வார்த்தையினிமித்தம் கஷ்டப்பட்டு பிரசன்னமான வாழ்க்கையை வாழ விரும்புவர்களுக்குமே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் நீங்கள் கண்டும் தொடக்கூடியதுமான ஒரு வரம்பை மட்டும் கொண்டவை **என்** வார்த்தையுடன் விளையாடிக் கொண்டும், **என்** வீட்டிலிருக்க விரும்பாமலும், உபவாசிக்கவும் முயற்சி எடுக்காமலும், **என்னுடைய** நாமத்தை மகிமைப்படுத்தாமலும் ஆனாலும் இருதயத்தினால் நான் வேண்டியபடியல்ல, தங்கள் உதடுகளினால் மட்டுமே துதித்தும் நடக்கிற ஜனங்களுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஏன் **என்** தாசனே? ஏனெனில் ஒருவரும் **என்னை** வஞ்சிக்க முடியாது **என்னிடமிருந்து** ஒழிக்க ஒரு இடமுமில்லை. தாசனே, முள்ளுகளினால் செய்யப்பட்ட கிரீடம் **என்** வார்த்தையை பரிகாசம் பண்ணுகிறவர்களுக்காக, **என்** வார்த்தையில் குற்றம் காணுபவர்களுக்காக, அவர்களின் இருதயங்களில் தட்டிக்கொண்டிருந்தும் அவர்களுக்கு **என்னை** ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களுக்கும் **என்** வார்த்தையை குற்றப்படுத்திக்கொண்டிருப்பவர்களுக்காகவும் வைத்திருக்கிறேன்.*'' என்றார் கர்த்தர்.

## -எடுத்துக் கொள்ளப்படுதலின் தரிசனம்-



அதன் பின் கர்த்தர்,'*தாசனே **நான்** உனக்கு எடுத்துக்கொள்ளப்படுதலையும், **என்னுடைய** வருகை எப்படியாக காணப்படும் என்பதையும் காண்பிப்பேன்*' என கூறினார். நான் கர்த்தரிடம், '*நீங்கள் எனக்கு அநேக காரீயங்களை காண்பித்தீர்கள், ஏன் எனக்கு இன்னும் அநேக காரியங்களைக காண்பிக்கப் போகிறீர்கள்*?' என்றேன். அதன் பின் நாங்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு வந்தோம், நான் ஆயிரமாயிரமான தேவதூதர்கள் அவ்விடத்தில் ஒன்று கூடி இருப்பதைக் கண்டேன். பின்னர் நாங்கள் கீழே இறங்க ஆரம்பித்தோம்; கர்த்தரும், நானும் ஒரு மிகவும் வெண்மையான அழகுமிக்க முகிலுக்குள் வந்து நின்றோம். கர்த்தர், தேவதூதர்களுக்கு சபையை எடுத்துக் கொள்ளும்படி கட்டளையளித்தார்; அதேநேரத்தில் என்னிடம், '*தாசனே மிக கவனமாக நீ இதை பார், ஏனெனில் என்னுடைய (இரண்டாவது) வருகையும் **நான்** திரும்பி வரும் போது இவ்விதமே காணப்படும்*', என்றார்.

நான், ஜனங்கள் தேவனின் நாமத்தை துதித்த வண்ணம பூமியின் நான்கு கோணங்களிலிருந்தும், எழுப்பப்படுவதைக் கண்டேன். அந்த ஜனங்கள் எல்லோரும் தேவனின் வல்லமையால் மூடப்பட்டு காணப்பட்டார்கள். அவர்கள் வெண்மையான வஸ்திரங்கள் தரித்த வண்ணம் மேலே, மேலே எழுந்தனர். அவர்கள் ஒரு அழகான பாட்டை பாட தொடங்கினார்கள், "*பரிசுத்த, பரிசுத்த, பரிசுத்தவர் நீங்களே கர்த்தாவே! பிதாவே, உங்களுக்கு நன்றி! ஏனெனில் நீங்கள் எங்களை தூக்கி எடுத்தீர்கள்! கர்த்தாவே நீங்கள் எங்களை உயிர்த்தெழுப்பியதற்காக நன்றி!*"



நான் விதம்விதமான அநேக ஜனங்களை, உயரமானவர்கள், கட்டையானவர்கள், கறுத்தவர்கள், வெள்ளை நிறமுள்ளவர்கள் என கண்டேன். அந்த எல்லா ஜனங்களும், எல்லா தேவதூதர்களும், கர்த்தரும் நானும் நின்ற முகிலுக்குள் ஏறி வந்தார்கள். எல்லா ஜனங்களும் தேவதூதர்களும் கர்த்தருக்கு நன்றிநிறைந்தவர்களாக துதி செலுத்தி, "*பரிசுத்த, பரிசுத்த, பரிசுத்தவர் நீங்களே கர்த்தாவே!*" என கூறினார்கள். அது ஒரு அதிசயமிக்கதான காட்சி, நான் அநேக ஜனங்களைக் கண்டேன், அவர்கள் எனக்கு அறிமுகமானவர்கள் போல காணப்பட்டார்கள். அவர்கள் யாவரும் தேவனின் மகிமையால் மூடப்பட்டும் காணப்பட்டார்கள்.

## *-உபத்திரவங்களின் தரிசனம்-*

அதன் பின் நாங்கள் தேவனுடைய சிங்காசனத்திடத்திற்கு வந்தோம், கர்த்தர் என்னிடம், '*தாசனே, இங்கே வா*' என்றார். நாங்கள் சிங்காச அறையிலிருந்து வெளியேறி ஒரு மிகச் சிறிய யன்னலைக் கொண்ட இடத்திற்கு வந்தோம். பின்னர் கர்த்தர் என்னிடம், '*தாசனே, இப்ப கீழே பார்*' என்றார். நான் பயங்கரமான வெறுமையையும், பெரிதான அழிவையும் கண்டேன்; முழு பூமியும் பாழடைந்து போய் வேதனையினால் நிரம்பியிருந்தது. கர்த்தர் என்னிடம், '*பார் **என்** தாசனே, நான் **என்** ஜனங்களை பூமியிலிருந்து எடுத்த பின்பு இப்படியே நடக்கப்போகிறது, இப்படி **என்** வருகையின் பின், **என்னுடைய** சபை **என்னுடன்** கூட இருக்கும் போது நடக்கும்*' என்றார்.

நான் மிகப் பெரிய வெறுமையான நாசத்தைக் கண்டேன். ஒரு கணம் ஜனங்கள் கொண்டாடிக் கொண்டிருந்தனர், ஆனாலும் மறு கணம் ஒரு தகப்பன் தன் மகனைத் தேடுவதையும், ஒரு தாய் தன் மக்களை தேடிப் பார்த்து கண்டு பிடிக்காமல் தவிப்பதையும், ஏனெனில் சர்வ வல்ல தேவன் அவர்களை எடுத்துக் கொண்டார். சொந்தக்காரர் தங்களுடைய மற்ற சொந்தக்காரரை தேடினார்கள் ஆனாலும் தேடிபிடிக்க முடியவில்லை. ஜனங்கள் தங்கள் அயலவர்களைத் தேடினார்கள் ஆனாலும் தேடிக்கொள்ளவில்லை, ஏனெனில் கர்த்தர் அவர்களை தன்னுடன் இருக்க எடுத்துக் கொண்டார்.

கொடுமையான பயங்கரமான சம்பவம் ஒன்று பூமியின் மேல் எங்கும் நடந்தது. ஒரு பாஸ்டர் (கிறீஸ்தவ போதகர்) ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஓடிச்சென்றார். நான் கர்த்தரிடம், '*கர்த்தாவே, அந்த மனிதன் ஏன் ஒரு இடத்திலிருந்து இன்னொன்றுக்கு ஓடுகிறார்*? எனக் கேட்டேன். கர்த்தர் பதிலாக, '*தாசனே, இந்த மனிதன் ஒரு போதகர், ஆனாலும் **என்** வருகையை தாமதிப்பேன் என நினைத்த படியால், அவர் கைவிடப்பட்டார். அவர் நினைக்கவில்லை, **நான்** இப்பொழுது வருவேன், அவர் நினைத்தார் **நான்** இன்னும் அதிக காலம் தாமதித்த பின்னே திரும்பவும் வருவேன், இதன் நிமித்தமே அவர் கைவிடப்பட்டார்.*' என்றார். அந்தப் போதகர் எல்லா இடமும் ஓடிக்கொண்டு, '*கர்த்தாவே, நான் ஏன் கைவிடப்பட்டேன்? நான் ஒரு போதகர் ஆனால், எனக்கு சபையில் ஒரு பதவி இருக்குமாயின், சபை எடுத்துக்கொள்ளப்பட்டு நான் கைவிடப்பட்டதானால், நான் ஏன் கைவிடப்பட்டேன்?*' கர்த்தர் என்னிடம், '*தாசனே, **என்னால்** ஒன்றுமே இப்போது செய்யமுடியாது, அவன் நினைத்தான் **என்** வருகையானது தாமதிக்கப்போகிறது என, ஆனாலும் அவன் கைவிடப்பட்டான்.*' என்றார்.

அந்த மனிதன் எப்படி உபத்திரவப்படுத்தப்பட்டான் என்பதைக் கண்டேன். அவன், "*நான் வேண்டிக் கொண்டதான ஒரேயொரு காரியம் கிறீஸ்துவுடன், நான் எடுத்துக்கொள்ளப்படுவதே! நான் வேண்டிக்கொண்டதான ஒரேயொரு காரியம் கர்த்தருடன் இருப்பதே, எனக்கு இங்கே இருந்து, பெரிய உபத்திரவத்தில் துன்புருத்தப்பட விருப்பமேயில்லை!*" அவன் இடத்துக்கிடம் ஓடியவண்ணம்: *ஏன் நான் கைவிடப்பட்டேன்? கர்த்தாவே என்னை உங்களுடன் கூட்டிச் செல்லுங்கள்! எனக்கு இங்கே இருந்து துன்பப்பட முடியாது*, என கூறினான். கர்த்தர் என்னிடம், '*தாசனே, **என்னால்** இப்போது ஒன்றுமே செய்ய முடியாது, ஒரு நீண்ட காலமாக **நான்** அவனுடன் கதைத்து **நான்** மிகவும் சீக்கிரமாக வரப்போவதாக கூறினேன், ஆனாலும் அவன் **என்னை** விசுவாசிக்கவில்லை, இப்பொழுது அவன்*



*கைவிடப்பட்டு விட்டான்'* என்றார்.
நான் இன்னும் பல ஜனங்கள் எல்லா இடமுமாக ஓடுவதைக் கண்டேன். மிகவும் அநேக ஜனங்கள் சமாதானத்தை தேடி பயங்கரமாக ஓடினார்கள், ஆனாலும் தேடிப்பிடிக்க முடியவில்லை. அவர்கள் சத்தமிட்டு கத்தினார்கள், "*எங்களுக்கு ஜீவனின் வார்த்தைகள் வேண்டும்! நாங்கள் தேவனின் வார்த்தைக்காக தாகமாயிருக்கின்றோம்*!" ஆனாலும் அது அதிகமாக தாமதமாகிவிட்டது, ஏனெனில் கர்த்தர் தன் சபையை தன்னுடன் கூட்டிக் கொண்டு போய் விட்டார்.

நான்,மரச்செடிகளுக்கூடாகவும், மலைகளுக்கூடாகவும், சமாதானத்தை தேடி, எத்தனையோ வாலிப பெண்களும் ஆண்களும் ஓடிக்கொண்டு போயும் தேடிபிடிக்காததைக் கண்டேன். கர்த்தர் என்னிடம்: இது ஏன் என்பதை விளங்கப்படுத்தினார், '*தாசனே, **நான் என்** சபையை எடுத்துவிட்டேன், இப்பொழுது சாத்தானே ஆட்சி செய்கிறான்*'. சாத்தான் பூமியின் மேல் ஏற்கனவே ஆட்சி செய்ய ஆரம்பித்தபடியால் பூமியின் மேல் எங்கும் வேதனை காணப்பட்டது! ஜனங்கள் இடத்திற்கிடம் ஓடினார்கள். ஜனங்கள் ஒருவரையொருவர் கடித்துத் தின்னவும் ஒருவரொருவரது தலை முடியை பிடித்து இழுக்கவும் விரும்பினார்கள், அவர்கள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி ஒருவரையொருவர் தாக்கினார்கள், ஏனெனில் அவர்களுக்கு சமாதானம் தேவைப்பட்டும், அதை கண்டு பிடிக்கமுடியவில்லை! ஆனாலும், கர்த்தர் தன் சபையை எடுத்துக் கொண்டமையால் அது செய்யக்கூடிய காரியமுமல்ல.
அவ்வளவுக்கு பயங்கரமான காலம் பூமியில் காணப்பட்டது, நான் மிகவும் திகிலடையும் (அதிர்ச்சி) காரியங்களையும் கண்டேன். அநேக ஜனங்கள் ஒருவரையொருவர் தாக்கி, "*எங்களுக்கு அன்பு வேண்டும்! எங்களுக்கு சமாதானம் வேண்டும்!*" எனக் கூறினார்கள். ஆனாலும் அது மிகவும் தாமதித்து விட்டது! கர்த்தர் என்னிடம், '*பார் **என்** தாசனே, நான் அவர்களுடன் கதைத்தேன், **நான்** நேரம் செலவழித்து அந்த ஜனங்களின் இருதயங்களில் தட்டினேன், ஆனாலும் அவர்கள் **என்னைத்** தேடவில்லை. இப்பொழுது, அவர்கள் கைவிடப்பட்டு விட்டார்கள், **என்னால்** அவர்களுக்காக ஏதும் செய்யமுடியாது. ஏன், **நான் என்** சபையை **என்னுடன்** எடுத்துக் கொண்டு முடிந்துவிட்டது. **என்னுடைய** எல்லா ஜனங்களும் பரலோகத்தில் **என்னுடன்**, ஆட்டுக்குட்டியானவரின் களியாணத்தை கொண்டாடும் வேளையில், இந்த ஜனங்கள் எல்லோரும் இங்கே மகா வேதனையை அனுபவிப்பார்கள், அதுமட்டுமல்ல அங்கே அழுகையும் பற்கடிப்பும் காணப்படும். ஏனெனில், அவர்களுக்கு **என்** வார்த்தைக்கு கீழ்படிய விரும்பவில்லை, ஆனாலும் **என்** வார்த்தையை பரிகாசம் பண்ணி பிழை கண்டுபிடிக்கவே மனதுள்ளவராயிருந்தனர்*."

## -ஜீவ புத்தகம்-



இதன் பின்னர் கர்த்தர் எனக்கு ஒரு மிக அழகுள்ள பெரிய புத்தகத்தை காண்பித்தார். அது பொன்னினாலானதும் மினுங்கிக் கொண்டும் காணப்பட்டது. நான் கர்த்தரிடம், '*கர்த்தாவே, அந்தப் பெரிய புத்தகம், அது எதற்கு?*' என்றேன். அவர் என்னிடம், '*தாசனே, இந்தப் புத்தகத்தில் என்னை துதிப்பவர்களுடையதும், மனம்திரும்பி பாவமன்னிப்பைத் தேடி **என்** வழிகளைத் தேடி நடப்பவர்களுடைய பெயர்களும் காணப்படுகிறது. ஏனெனில் இதுவே ஜீவனின் புத்தகம். இந்தப்புத்தகத்தில் ஒன்று கூடி **என்** நாமத்தை துதித்து மகிமைப்படுத்துபவர்களின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது.*' என்றார்.
அந்தப் புத்தகம் மிகப் பெரியதும் அதில் எழுதப்பட்ட எழுத்துக்கள் பொன்னினால் எழுதப்பட்டும் இருந்தன. அவர் என்னிடம், '*பார், **என்** தாசனே, **என்னுடைய** இரக்கங்களினிமித்தம், அநேகர் தங்கள் பின்பக்கங்களை **எனக்கு** திருப்பியும் **நான்** அவர்களின் பெயர்களை அழிக்கவில்லை. அநேகர் தங்கள் பின்பக்கங்களை எனக்கு திருப்பிவிட்டார்கள், ஆனாலும் **என்னுடைய** கருணை மிகப் பெரியதானதால் இன்னமும் அவர்களின் பெயர்களை **நான்** அழிக்கவில்லை, ஏனெனில் யாராவது அழிந்து போவதைக் காண **நான்** விரும்பவில்லை ஆனாலும் எல்லோரும் நித்திய வாழ்க்கையை பெற்றுக்கொள்ளவேண்டும்*!' நான் அந்தப் புத்தகத்தை தொட ஆரம்பித்தேன்: அதில் இவ்வளவு அதிகமான பெயர்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

## -நரகம்-

அதன் பின்னர் கர்த்தர் என்னிடம்: '*தாசனே **நான்** உனக்கு நரகத்தைக் காண்பிப்பேன்*' என்றார். ஆப்பொழுது நான்: '*வேண்டாம் கர்த்தாவே, நீங்கள் காண்பித்த எல்லாவற்றுடன் என்னால் இவற்றை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. எனக்கு நீங்கள் காண்பித்த காரியங்கள் காணும்*' என்றேன். கர்த்தர் என்னிடம்: ***நான்** உனக்கு நரகத்தைக் காண்பிப்பேன் அப்பொழுது நீ **என்** சபையிடம் சென்று அங்கே பரலோகம் இருக்கிறது போல நரகமும் இருக்கிறது*, என்று கூறக் கூறினார். நாங்கள் கீழ் நோக்கி செல்ல, செல்ல ஆரம்பித்தோம். நாங்கள் நரகத்திலிருந்து மிகவும் தூரமாக இருக்கும் போதே அழுகையினதும் மிகவும் பெரிய கூக்கிரல்களினதும் சத்தங்களை கேட்க ஆரம்பித்தேன். நான் '*கர்த்தாவே என்னை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள் ஏனெனில் என்னால் இந்த உபத்திரவங்களை தாங்க முடியாது*' கர்த்தர் என்னிடம்: '*பார் **என்** தாசனே நீ பயப்படாதே ஏனெனில் **நான் உன்னிடம்** இருக்கிறேன்.*' ஏன்றார். நாங்கள் ஒரு சில கால்வாய்களுக்கூடாக செல்ல ஆரம்பித்தோம். நான் ஒரு போதும் பூமியில் உணராத வொரு பெரிய அந்தகாரத்தை அங்கே உணர்ந்தேன்.



நாங்கள் ஒரு சில மதில்கள் உள்ள ஒரு பக்கமாக நடந்து சென்ற போது அநேக ஆத்துமாக்கள் வேதனையுடனும் அழுகையின் கூக்கிறலுடனும் அழும் சத்தத்தைக் கேட்டேன். கர்த்தர் என்னிடம்: '*தாசனே நாங்கள் முன்னே செல்லுவோம்*' எனறார். ஒருவன் கூக்கிறலிடுகின்ற ஒரு இடத்திற்கு வந்து நின்ற போது நான் என் தேவனிடம்: ' *கர்த்தாவே நாங்கள் ஏன் இந்த இடத்தில் நிற்கின்றோம்?* ஏனக் கேட்டேன். கர்த்தர் என்னிடம்: '*பார் தாசனே இந்த மனிதர் பூமியிலிருந்த போது உன்னுடைய ஒரு சொந்தக்காரனாக இருந்தார்*'. நான் அதற்கு: *இவர் யார்? என்னால் இவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாது*, என்ற போது, ''*இந்த ஆத்துமா பூமியிலுள்ள போது உன்னுடைய பாட்டி அவள் உன்னுடைய சொந்தக்காரன் ஆனாலும் அவள் **என்மேல்** விசுவாசிக்கவில்லை இதனிமித்தமே அவள் இந்த இடத்தில் இருக்கிறாள்*'' எனக் கர்த்தர் விளங்கப்படுத்தினார்.

அவள்: ' *தயவு செய்து எனக்கு தண்ணீர் கொஞ்சம் குடிக்கக் கொடுங்கள், என்னை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள், ஏனெனில் என்னால் இந்த நரகத்தின் வேதனையை மேலும் தாங்க முடியாது*' என அழுத போது என்னால் ஒன்றுமே செய்ய முடியாமல் அழ ஆரம்பித்தேன். நான் கர்த்தரிடம், '*உங்கள் அளவற்ற இரக்கங்களினாலும் அளவற்ற நன்மைகளினாலும் அவரை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள், அவள் ஏன் இந்த இடத்தில் இருக்கிறாள்? அவளுடைய பெற்றோர் அவள் பரலோகத்திலிருப்பதாக கூறினார்கள்?*' ஏன அழுதேன்.

கர்த்தர் என்னிடம்: '*தாசனே, போதகர்கள் உன் பெற்றோரிடம், அவள் பரலோகம் சென்றாள், எனக் கூறியது ஒரு பொய்; ஏனெனில் அவள் விக்கிரகங்களுக்கு முன்னால் விழுந்து கும்பிடும் போது அவள் நேசித்த அந்த விக்கிரகங்களால் அவளை காப்பாற்ற முடியவில்லை. அநேக தடவை அவளை இரட்சிக்கும் படியாக **நான்** அவளுடைய இருதயத்தின் கதவில் தட்டுவதுண்டு, அவள் தன் இருதயத்தை திரந்து **என்னை** உள்ளே வரவழைப்பாள், பின்னர் **என்** வார்த்தையை பரிகாசம் பண்ணி, **என்** நாமத்தை கனம் பண்ணி பின்பற்றுவதிலும் பார்க்க உலகத்தை பின்பற்றுவது மேன்மையானது, என்பதினிமித்தம் அவள் இந்த இடத்தில் இருக்கின்றாள். அவள் ஒருபோதும் **என்** வார்த்தையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, ஒருபோதும் மனம் திரும்பவில்லை, போதகர்கள், அவள் வானங்களுக்கு பறந்து சென்று வானங்களிருள்ள மந்திரைகளில் வாசம் செய்வதாக கூறியது ஒரு பொய், ஏனெனில் பார் **என்** தாசனே, அவள் எங்கே இருக்கின்றாள் என,*' கர்த்தர் கூறினார். அவள் மிக்க வேதனையுடன் அழுதாள். அவள்: '*தயவு செய்து எனக்கு தண்ணீர் கொஞ்சம் குடிக்கக் கொடுங்கள், என்னை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள்*, என கத்தினாள். கர்த்தர் என்னிடம்: '*தாசனே, **என்னால்** இப்ப ஒன்றுமே செய்ய முடியாது, இந்த ஆத்துமா **எனக்கு** இப்ப சொந்தமானதல்ல*' என்றார். நாங்கள் திரும்பி நடந்த போது அவள் எங்களிடம் கத்தி கூப்பிட்டு: '*இல்லை, என்னை விட்டு போக வேண்டாம், எனக்கு தண்ணீர் கொஞ்சம் குடிக்கக் கொடுங்கள், என்னை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள்*' என்றாள், ஆனாலும் கர்த்தரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

நாங்கள தொடர்ந்தும் அநேக ஆத்துமாக்களை நோக்கி பார்த்தோம். ஆத்துமாக்கள் கர்த்தருடைய வஸ்திரங்களை பற்றிக்கொள்ள எத்தனித்து, "*எங்களை இந்த இடத்திலிருந்து வெளியே எடுங்கள்*" என்றார்கள். ஆனாலும் கர்த்தரோ: '***என்னை** விட்டு கிளம்புங்கள், ஏனெனில் நீங்கள் **எனக்கு** சொந்தமானவர்களல்ல, நீங்கள் சாத்தானுக்கும் அவனுடைய பேய்களுக்கும் சொந்தமானவர்கள்*' என்றார்.

## -சாத்தானுடைய சிங்காசனம்-

நாங்கள் தொடர்ந்து பிரயாணம் பண்ணி மிகவும் பயங்கரமான ஒரு இடத்திற்கு வந்தோம், கர்த்தர் என்னிம், *'பார் தாசனே, **நான்** உனக்கு சாத்தானின் சிங்காசனத்தைக் காட்டுவேன்'* என்றார். நான் அவரிடம்,*'இல்லை, கர்த்தாவே எனக்கு அந்த சிங்காசனத்தை பார்க்க மனமில்லை*, என்றேன். அவர் என்னிடம், *'தாசனே, பயப்படாதே **நான் உன்னிடன்** கூட இருக்கின்றேன்'* என்றார். அதன் பின்னர் நாங்கள் ஒரு மிகவும் பயங்கரமான இடத்திற்கு வந்தோம், ஒரு பயங்கரமான பெரிய கதிரையின் மேல் சாத்தான் வீற்றிருப்பதைக் கண்டேன். அவனிடம் பெரிய நிகங்கள் காணப்பட்டன, அவன் சிரித்து, சிரித்து நிற்பாட்ட முடியாத அளவிற்கு சிரித்துக் கொண்டிருந்தான். நான் எல்லா இடங்களிலும் பேய்களைக் கண்டேன். வெவ்வேறு விதம்விதமான பருமானங்களில் அவை காணப்பட்டன, நான் அதிபதிகளையும், பெலனான கட்டுகளையும், விதம்விதமான பேய்களையும் கண்டேன். சாத்தான் பேய்களுக்கு எவ்விதம் பூமிக்கு சென்று பல்வகைப்பட்ட பொல்லாப்புகளை கொண்டு வரும்படியாக கட்டளைகளை கொடுப்பதையும் கண்டேன்.

இந்தப் பேய்கள் சென்று விபத்துக்களை ஏற்படுத்துவதையும், கொளைகளையும் தூண்டுவிக்கிறதையும், சண்டை சச்சரவுகளை குழப்புவதையும், விவாகங்களை முறிக்கிறதையும், இப்பேற்பட்ட சகல விதமான பொல்லாப்புகளுக்கு காரணமாக இருப்பதையும் கண்டேன். பின்னர் அவைகள் கீழே வந்து அவை செய்த சகல காரீயங்களையும் பற்றி கணக்கு கொடுப்பார்கள். பின்னர் சாத்தான் சிரித்து, சிரித்து முடித்த பின்னர் அவர்கள் ஒவ்வொன்றுக்கும் பரிசு அளிப்பான். பேய்களும் அவனை புகழ்ந்து பாடி, போற்றி துதிப்பார்கள்.

சாத்தானிடம் கிறீஸ்தவர்களை அழிப்பதற்கு அநேக பெரிய திட்டங்களும், ஊளியக்காரரை அழிப்பதற்கு இன்னும் பெரிய திட்டங்களும் காணப்பட்டது. நான் பெரிய சபைகளையும், நவீன வழிபாடுகளால் நிறைந்த சபைக் கூட்டங்களையும் கண்டேன். கர்த்தர் என்னிடம்: *'பார் தாசனே, இந்த சபைகள் சாத்தானினால் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கிற படியால் அவர்களால் **என்** வருகையில் எடுத்துக் கொள்ளப்பட முடியாது'* என்றார்.

கர்த்தர் என்னிடம், பேய்கள் எவ்விதம் அநேக கொளைகளுக்கு தூண்டுவித்து அவற்றிற்கு காரணமாக இருக்கிறான் என்பதையும், பின்னர் அந்த ஆத்துமாக்கள் இந்த பயங்கரமான அந்தகாரத்துக்கு வருவதையும் காண்பித்தார். நான் ஒரு அக்கினி சூளையைக கண்டேன், கர்த்தர் என்னிடம்: *தாசனே பார், இது தான் அக்கினிக் கடல், **இதுவே நரகம்**'* என்றார்.

பேய்கள் கொளைவுகளை ஏற்படுத்திய ஒவ்வொரு தடவையும், ஆத்துமாக்கள் அந்த இடத்திற்கு விழுந்துக் கொண்டிருந்தார்கள். நெருப்பு அவர்களை பற்றிக் கொண்ட பின்னர் அவர்கள் உருகுவார்கள். அந்த ஆத்துமாக்கள் வேதனையுடனும் பயங்கரத்தினிமித்தமும் கூக்கிரலிட்டு கத்துவார்கள், பின்னர் பேய்கள் சிங்காசனத்திற்கு திரும்பி வந்து சாத்தானிடம், அவர்கள் செய்த கெட்டித்தனத்தை புகழ்ந்து பேசும் போது சாத்தானும் சிரித்து, சிரித்து அந்தப் பேய்களுக்கு பரிசுகள் அளிப்பான். அந்தப் பேய்களும் அவனுக்காக பாடி, துள்ளி எல்லாவிதமான புகழும் காரீயங்களை சாத்தானுக்கு செய்து அவனை பாராட்டத் தொடங்கின. சாத்தான் அந்த ஆத்துமாக்கள் யாவரும் பாதாளத்துக்கு வரும் போது சந்தோசத்தினிமித்தமும் பெருமையினிமித்தமும் சிரித்துக் கொள்ளுவான். அவைகள் செக்கனுக்கு பின் செக்கன், விழ ஆரம்பித்த போது சாத்தான் பெருமையின் அதிகத்தினிமித்தம் சிரிப்பை நிற்பாட்டமுடியாது தொடர்ந்தும் சிரிப்பான்.

நான் அநேக பிசாசுகளின் உணர்வுகளையும், பெலனுள்ள கோட்டைகளையும் உணர்ந்தேன். நான் கூறினேன், *'கர்த்தாவே, தயவுசெய்து என்னை இந்த இடத்திலிருந்து எடுத்துக்கொள்ளுங்கள், என்னால் இவற்றை தாங்க முடியாது'* என்றேன். பிசாசுகள் அங்கேயுள்ள ஆத்துமாக்களை குத்தி தொந்தரவு படுத்தின. ஆத்துமாக்கள், *'எங்களை விட்டுவிடுங்கள்! நிம்மதியாக இருக்க விட்டுவிடுங்கள், எங்களுக்கு மேலும் வேதனை வேண்டாம், நிம்மதியே வேண்டும்!'* பின்னர் பிசாசுகள் இதைக் கேட்டு சிரிக்கத் தொடங்குகின்றன.



## -பரிசுத்த நகரம்-

அதன் பின்னர் நாங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறினோம், கர்த்தர் என்னிடம், *'பார், தாசனே **நான்** உனக்கு பரிசுத்த நகரத்தை காண்பிப்பேன், அப்பொழுது நீ சென்று **என்** ஜனங்களுக்காக **நான்** வைத்திருக்கும் பேரழகுள்ள இராஜ்ஜியங்களைப் பற்றி போய் கூறலாம்'* என்றார். நாங்கள் மேலேறி அநேக அழகான உயர்ந்த ஊசியிழை மரங்கள் கொண்ட ஒரு சிறந்த அழகுள்ள இடத்திற்கு வந்தோம். அங்குள்ள யாவும் அழகுமிக்கவை, சமாதானம் நிறைந்த இடம்.

அந்த நகரத்தின் கதவில் ஒரு அழகான வானவில் காணப்பட்டது. வீதியின் இருபக்கங்களிலும் அநேக தேவதூதர்கள் நின்றார்கள். நாங்கள் அந்த கதவிற்கூடாக சென்ற போது கர்த்தர் என்னிடம், '*தாசனே இது தான்* ***பரிசுத்த நகரம்***'. சிறந்த அழகுடைய, பூமியில் நான் ஒரு போதும் காணாத சிறப்பான ரோஜா பூக்களைக் கொண்ட ஒரு தோட்டத்திற்குள் வந்தோம்.



நான் கர்த்தரின் கையை விட்டு விட்டு அந்த தோட்டத்திற்குள் ஓடினேன். நான் அந்த பூக்களைக் கொஞ்சினேன்: அந்த பூக்களின் நறுமனம் சிறந்தது, நான் ஒரு பூவை உடைக்க ஆரம்பித்த போது, கர்த்தர் என்னிடம், *'இல்லை தாசனே, உன்னால் ஒன்றுமே இன்னமும் எடுக்கமுடியாது.* ***என்*** *ஜனங்கள்,* ***என்*** *சபை இங்கே வந்த பின் மட்டுமே உன்னால் எடுக்கமுடியும்*', என்றார். நான், '*கர்த்தாவே, எனக்கு ஒரு பூவை மட்டும் பூமிக்கு எடுத்துச் சென்று சபைகளுக்கு காட்ட உத்தரவு தாருங்கள் ஐயா*' என்றேன். கர்த்தரோ, *'இல்லை* ***என்*** *சபை இன்னமும் இங்கே இல்லை*' என்றார். நான் வெவ்வேறு விதம்விதமான அழகான பூக்களைக் கண்டேன். அதன் பின்னர் நாங்கள் ஒரு அழகான பச்சை புல் வெளிக்கூடாக பிரயாணம் செய்தோம். கர்த்தர் புல்லின் மேல் உட்கார்ந்து ஒரு அழகான சிரிப்புடன், '*தாசனே, நீ கண்டு தொடுகின்ற இவை யாவற்றையும்* ***நான் என்*** *ஜனங்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கின்றவை*' என்றார்.

பழங்களினால் நிறைந்த மிகப் பெரிய மரமுள்ள ஒரு இடத்திற்கு பின்னர் நாங்கள் சென்றோம். நான், '*கர்த்தாவே இந்த மரம் என்ன? இதிலுள்ள பழங்கள் என்ன?*' எனக் கேட்டேன். நான் அதன் பழத்தில் ஒன்றை பிடுங்க எத்தனித்த போது கர்த்தர் என்னிடம் மீண்டும், *'இல்லை தாசனே, இந்த மரம் ஜீவவிருட்சத்தின் மரம்,* ***என்*** *ஜனங்கள் இங்கே வரும் போது இந்த மரத்தின் கனிகளைப் புசிப்பார்கள். அதுவரைக்கும்* ***என்*** *ஜனங்கள் இங்கே வரும் வரைக்கும் நீ இந்த இடத்திலுள்ள எந்தவொரு காரியத்தையும் எடுக்கமுடியாது.*' என்றார். அந்த மரத்தில் அழகுமிக்க பழங்கள் அநேகம் காணப்பட்டன.

நாங்கள் தொடர்ந்து சென்று, அநேக உயர்ந்த ஊசியலை மரங்களைக் கொண்ட வேறொரு அழகுமிக்க இடத்திற்கு வந்தோம். கர்த்தர் என்னிடம், '*தாசனே, இவை யாவும்* ***என்*** *ஜனங்களுக்காக* ***நான்*** *வைத்திருக்கின்றவை. தாசனே இங்கே வா,* ***நான்*** *உனக்கு வேறு அநேத அதிசயங்களைக் காண்பிப்பேன்*' என்றார்.

நாங்கள் தொடர்ந்து பிரயாணம் பண்ணிய போது, அநேக அழகான வண்ணாத்திப் பூச்சிகளையும் மிருகங்களையும் கண்டோம். கர்த்தர் என்னிடம், '*தாசனே இவை யாவும்* ***என்*** *சபைக்காக* ***நான்*** *கைத்திருக்கும் காரியங்கள், வெகு சீக்கிரமாக அவர்கள் இந்த இடத்தில், இந்த பரிசுத்த நகரத்தில் பிரயாணம் பண்ணுவார்கள்*' என்றார்.

நாங்கள் இன்னுமொரு அழகான இடத்திற்கு வந்தோம், அங்கே அநேக ஊசியிலைக் கொண்ட அநேக மரங்கள் காணப்பட்டன. கர்த்தர் என்னிடம், '*தாசனே நீ இங்கே வா,* ***நான்*** *உனக்கு அதிசயங்களைக் காண்பிப்பேன்*' என்றார்.



நாங்கள் தேவதூதர்களால் நிறைந்த சிறப்பான இடத்திற்கு வந்தோம். ஒரு தேவதூதன் மிகப் பெரிய எக்காளத்தை தன் வாயில் பிடித்துக் கொண்டு காணப்பட்டார். நான், '*கர்த்தாவே, இந்த தேவதூதன் என்ன செய்கிறார்?*' எனக் கேட்டேன். கர்த்தர் என்னிடம், '*பார் தாசனே, இந்த தேவதூதன்* ***நான்*** *ஒரு கட்டளை கொடுக்கும் வரை காத்திருக்கின்றார், அப்பொழுது அவர் அந்த எக்காளத்தை ஊதுவார், எக்காளம் ஊதப்படும் போது* ***என்*** *ஜனங்கள் உயர்த்தப்படுவார்கள், அவர்கள் மறுரூபமடைவார்கள். ஆனாலும் ஒரு காரியத்தை குறித்து நிச்சயமாயிருங்கள், அந்த எக்காளத் தொனியானது காத்துக்கொண்டிருக்கிறவர்களால் மட்டுமே கேட்கப்படும். இதனால்* ***என்*** *ஜனங்களிடம், நித்திரையாயிருக்காமல் விழிப்புள்ளவர்களாக இருக்கப் போய் கூறுவாயாக. ஏனெனில் நித்திரையாயிருப்பவர்களுக்கு* ***என்*** *எக்காளத்தொனி கேட்கமுடியாது,* ***என்*** *ஜனங்களுக்கு ஜாக்கிரதையாக இருக்கக் கூறு, ஏனெனில் நித்திரையாக இருப்பவர்களை* ***என்னால்*** *எழுப்ப முடியாது*' என்றார் கர்த்தர்.

அந்த தேவதூதனானவர், மிகவும் சிறந்த அழகுள்ளவரும், அவருக்கு பின்னால் அநேக அதிகமான தேவதூதர்கள் சிறிய எக்காளங்களை பிடித்த வண்ணமும் காணப்பட்டன. அந்த எக்காளங்கள் பொன்னிலாலானவை, மினுங்கிக் கொண்டும் காணப்பட்டன. கர்த்தர் என்னிடம், '*தாசனே,* ***என்*** *ஜனங்களிடம் ஆயத்தப்படும் படி சொல், ஏனெனில்* ***நான்*** *எக்காளத்தொனியை ஊத கட்டளையை கொடுக்க ஆரம்பிக்கப் போகிறேன்*' என்றார்.



நாங்கள் தொடர்ந்தும் பிரயாணம் பண்ணினோம்: கர்த்தர் என்னிடம், '*பார் தாசனே,* ***நான் என்*** *தகப்பனின் சிங்காசனத்தை காண்பிப்பேன்,* ***நான்*** *அதனை இது வரைக்கும் காட்டவில்லை, ஆனாலும் இனி காண்பிப்பேன், அப்பொழுது நீ சென்று* ***என்*** *தகப்பன் மெய்யாகவே இருக்கின்றார் எனவும்* ***நான்*** *மெய்யாக இருக்கின்றேன் எனவும் கூறுவாய்.*' ஏன்றார். நாங்கள் தொடர்ந்து நடந்தோம், கர்த்தரும் தேவதூதரும் நானும், நாங்கள் தகப்பனின் சிங்காசனத்திலிருந்து தூரவாக இருக்கும் போதே என்னால் அந்தக் காட்சியை இன்னமும் எடுத்துக் கொள்ளமுடியவில்லை; என்னால் அப்பேற்பட்ட வல்லமைக்கும் மகிமைக்கும் முன்னால் நிற்க முடியவில்லை. நாங்கள் இன்னும் கிட்ட கிட்ட செல்லும் போது நான் ஒரு சிறகுவைப் போல எனக்கு தென்பட்டது, என்னால் நடக்க முற்றுமாக முடியவில்லை. தேவதூதர்கள் என்னை பிடித்துக்கொள்ளாவிட்டால் நான் நடந்திருக்க மாட்டேன் நாங்கள் பிதாவின் சிங்காசனத்திற் முன்னால் வந்தோம், சிங்காசனத்திலிருந்து மிகவும் வியப்பார்வதற்குரிய பயங்கரமான வல்லமை புறப்பட்டதை என்னால் உணரக் கூடியது. வல்லமையுள்ள மின்னல்கள் சிங்காசனத்திலிருந்து புறப்பட்டன, அவை மிகவும் மகிமையும் மகத்துவமாகவும் காணப்பட்டன. அப்பேற்பட்ட வல்லமை சிங்காசனத்தை சூழ்ந்தது, அது பொன்னிலானது, பிரகாசித்து ஒளி வீசியது. ஒருவர் சிங்காசனத்தில் வீற்றிருந்தார், ஆனாலும் என்னால் அவருடைய முகத்தைக் காணமுடியவில்லை, என்னால் அந்த சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட வல்லமையைத் தாங்க முடியவில்லை. என்னால் பிதாவை, அவருடைய இடுப்பிலிருந்து கீழ் வரைக்கும் மட்டுமே தரிசிக்க முடிந்தது, ஆனாலும் அவருடைய இடுப்பிலிருந்து மேல் காணமுடியாது நான் கீழே விழுந்தேன். நான் கீழே விழுந்ததன் காரணம் அந்த வல்லமையையும் மகிமையையும் தரிசிக்க முடியாததே.



அதன் பின்னர் நான் 24 மூப்பர் கர்த்தருடைய நாமத்தை துதித்து மகிமைப்படுத்துவதைக் கண்டேன். மிகவும் பெரிய தலைமைத் தேவதூதர்கள் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதைக் கண்டேன். 24 மூப்பர் முழங்கால் படியிட்டு, "*பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரே நீங்கள் கர்த்தாவே!*" என்றனர். தேவதூதர்கள் ஒருபோதும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதிலும் கர்த்தரைத் துதிப்பதிலும் களைத்துப் போகவில்லை, மூப்பர்களும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதை நிற்பாட்டவில்லை. சிங்காசனத்திலிருந்து பயங்கரமான அக்கினி புறப்பட்டது, அங்கே அநேக அழகுமிக்க காரீயங்கள் சிங்காசத்தில் காணப்பட்டன.



அதன் பின்னர் நாங்கள் அந்த இடத்தை விட்டு, பிரமாண்டமான ஒரு தேவதூதன் இருந்த ஒரு இடத்திற்கு வந்தோம். நான், '*கர்த்தாவே, இந்த தேவதூதன் யார்?*' என்றேன். கர்த்தர், '*பார் தாசனே, இவரே காபிரியேல் தேவதூதன்*' *இன்னுமொரு தேவதூதனைக் காண்பித்து, 'இவரே மைக்கல் தேவதூதன்*' என்றார். அவர்கள் மிகவும் பருமனத்தில் பெரியதும் அழகில் சிறந்தும் காணப்பட்டனர். கர்த்தர் என்னிடம், '*தாசனே,* ***என்*** *ஜனங்களுக்கு மெய்யாக காபிரியேல் தேவதூதனும் மைக்கல் தேவதூதனும் இருப்பதாக கூறு*' என்றார்.

அதன் பிற்பாடு கர்த்தர், ' *தாசனே, இங்கே வா, நான் உனக்கு* ***என்*** *கோலைக் காண்பிப்பேன்.*' என்றார். நாங்கள் இன்னுமொரு இடத்திற்கு வந்த போது கர்த்தர் மர நுனிகளைக் கொண்ட ஒரு கசையைக் காண்பித்தார். ஆதனால் ஒரு பெரிய கதிரையின் பின்பக்கத்தை அடித்து, '*தாசனே, கீழ்படியாதவர்களுக்காக,* ***என்*** *வார்த்தையை கீழ்படிய மனதில்லாதவர்களுக்காக* ***நான்*** *இந்த கசையை வைத்திருக்கின்றேன்.* ***என்*** *வார்த்தையை அவர்களுக்கு கீழ்படிய மனதில்லாத பணயால்* ***நான்*** *இந்த கசையை பாவித்து அவர்களை தண்டிப்பேன்,* ***நான்*** *அன்புக்கூறுகிறவர்களை தண்டிக்கிறேன்*' எனறார். நான் கர்த்தர் இவ்விதமாக அந்த கசையை பாவித்து அடிப்பதைக் கண்டு, '*தயவு செய்து அப்பா என்னை அந்த கசையினால் அடிக்காதீர்கள்*' என்றேன். அதற்கு அவர், "*சரி தாசனே,* ***எனக்கு*** *கீழ் படி, ஏனெனில் கீழ்படியாதவர்களை* ***நான்*** *சிட்சிப்பேன்*' என்றார். *(கர்த்தர் எங்களை கசைகளினால் அடிப்பதாக*

*கூறும் போது எங்களுக்கு வரும் வியாதிகள், பிரச்சனைகளைக் குறிக்கிறார்*) (வெளிப்படுத்தல்3:19—*நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக்கடிந்த கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிறதையாயிருந்து, மனந்திரும்பு.)*

கர்த்தர் என்னை விலைமதிப்புக்குரிய இடத்திற்கு எடுத்துச் சென்றார், மிகவும் பிரமாண்டமான இடம், இங்கே நான் இன்னும் அதிக கிரீடங்களைக் கண்டேன். ஆனாலும் இந்தக் கிரீடங்களில் பெயர்கள் பதிக்கப்பட்டும் முத்துக்களால் நிறைந்தும் காணப்பட்டன. கர்த்தர் என்னிடம், "*பார் தாசனே, இது **என்னுடைய** தாசனாகிய இயிவ் அவில்லாக்கும், இது **என்** தாசனாகிய அர்த்துரொ காசியாவிறகும்,*" என்றார். விலைமதிப்பிற்குரிய இந்த கிரீடங்களில் "அயிடா வடில்லா" எனவும் "மிகுவேல் டுரோன்" எனவும், வேரொன்றில் "ஆமண்டா டுரோன்" எனவும் இன்னொன்றில் "பப்லோ பின்டாடோ" எனவும் "நாகும் சமுதியா" எனவும் காணப்பட்டன. கர்த்தர் என்னிடம், "*தாசனே, **நான்** இவற்றை உங்களுக்கு பார்க்க விட்டதன் காரணம் **என்** திராட்சைத் தோட்டத்தில் ஊழியம் செய்கிற **என்** ஊழியக்காரருக்கு **நான்** இவற்றை இங்கே வைத்திருக்கின்றேன். அப்பொழுது **என்** வார்த்தையை பிரசங்கிக்கும் **என்** ஊழியக்காரரை நீங்கள் காணலாம். அவர்களுக்காக பெரிய ஊதியங்களை வைத்திருக்கின்றேன்.*" நான் ஆயிரமாயிரமான கிரீடங்களையும் யாவும் பெயர்களுடன் காணப்பட்டதையும் கண்டேன்.



நான் இன்னுமொரு கிரீடத்தைத் தொட்டேன், ஆனாலும் இந்தக் கிரீடமானது அதிலுள்ள எல்லா கற்களையும் இழக்கத் தொடங்கியது. "*கர்த்தாவே! இது என்னுடையதாக இருக்கக்கூடாது.*" என்றேன். கர்த்தர், "*பார் தாசனே, இவர்கள் **என்** திராட்சைதோட்டத்தில் இனிமேலும் வேலை செய்யாவிட்டால், **என்னை** துதியாமல் தங்கள் பின்புறங்களை **எனக்குத** திருப்பியவர்களுக்கு இதுவே நடக்கும். **என்** திராட்சைத்தோட்டத்தில் இனிமேலும் ஊழியம் செய்ய விரும்பாதவர்களுக்கு, இவ்விதமே அவர்களுடைய கிரீடங்களுக்கு நடக்கும்.*" (வெளிப்படுத்தல் 3:11)

நித்திரையாயிருக்கும் அநேகருள்ள ஒரு அழகான இடத்திற்கும் கர்த்தர் என்னை கூட்டிச் சென்றார். அவர்கள் வெண்வஸ்திரம் அணிந்திருந்தார்கள். நான் " *ஆண்டவரே அவர்கள் யார்?*" என்றேன். கர்த்தர் என்னிடம், " *பார் தாசனே, இவர்கள் எல்லோரும் பூமியில் மரித்து இப்பொழுது பாராதீஸியில் இளைப்பாறிக் கொண்டு இருக்கிறார்கள். **நான்** எக்காளமானது தொனிப்பதற்கு கட்டளையைக் கொடுக்கும் போது மரித்தவர்கள் முதல் எழும்புவார்கள், அதன் பின்பே பூமியலுள்ளவர்கள் எழும்புவார்கள்.*" என்றார். இங்கே அநேக ஜனங்கள், வெண் வஸ்திரம் தரித்தவர்களாக காணப்பட்டார்கள். (1 தெசலோனியர் 4:16-17)

எவராவது எவருடனாவது கதைத்துக் கொண்டிருக்கவில்லை, ஒரு மிகவும் ஆழமான நித்திரையில் காணப்பட்டார்கள். கர்த்தர் என்னிடம், "*தாசனே இவர்கள் ஆறுதலடைகிறார்கள், ஆனாலும் எக்காளம ஊதப்படும் போது அவர்கள் முதலிலும் பின்னர் பூமியலுள்ள எஞ்சியுள்ளவர்கள் ஒருமிக்க **என்னுடன்** ஆட்டுக்குட்டியானவரின் களியாணவிருந்தை கொண்டாட எழுப்பப்படுவார்கள்.*" என்றார் இயேசு.

## [The END]

by ***Jannet Balderas Canela***

மொழிபேர்ப்பு: Eugene K Arachchige <rehanypriscilla@yahoo.co.uk>